


**19. 06. 2026**

தலைப்புச் செய்திகள்

1. பிரதமர் திரு. நரேந்திரமோடி வளர்ச்சி அடைந்த பாரதத்திற்கான வேலைவாய்ப்பு ஊக்கத்தொகை திட்டத்தின் கீழ் ஊக்கத்தொகையை புதுதில்லியில் இன்று வழங்குகிறார்.

2. நாட்டில் குற்றவியல் நீதி அமைப்பு தற்போதைய மாற்றங்களை பூர்த்தி செய்யும் வகையில் புதுப்பிக்கப்பட்டு வருவதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா தெரிவித்துள்ளார்.

3. காவிரியின் குறுக்கே மேகதாது அணை கட்டும் கர்நாடக அரசின் நடவடிக்கைக்கு எதிரான தனி தீர்மானம் சட்டப்பேரவையில் இன்று ஒருமனதாக நிறைவேறியது.

4. மேகதாது அணை விவகாரத்தில் வேறுபாடுகளை களைந்து அரசியல் கட்சிகள் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்று முதலமைச்சர் திரு. விஜய் கேட்டுக்கொண்டார்.

5. மக்காவ் ஓப்பன் பேட்மிண்டன் மகளிர் ஒற்றையர் அரையிறுதிக்கு இந்தியாவின் Ashmita Chaliha முன்னேறியுள்ளார்.

இனி விரிவான செய்திகள்

************

பிரதமர்

பிரதமர் திரு.நரேந்திரமோடி வளர்ச்சி அடைந்த பாரதத்திற்கான வேலைவாய்ப்பு ஊக்கத்தொகை திட்டத்தின் கீழ் 2 ஆயிரத்து 400 கோடி ரூபாய் ஊக்கத்தொகையை புதுதில்லி விஞ்ஞான் பவனில் இன்று மாலை வழங்குகிறார்.

இந்த ஊக்கத்தொகை நாடு முழுவதும் 15 லட்சம் பயனாளிகளுக்கு வேலை வாய்ப்புகள் கிடைக்க வழி வகுத்துள்ளது.

இத்திட்டத்தின் கீழ் முதன்முறையாக பணிபுரியும் ஊழியர்கள் இந்த ஊக்கத்தொகை பெற தகுதியுடையவர்கள்.

கூடுதல் வேலை வாய்ப்பை உருவாக்கும் முதலாளிகள் மற்றும் ஒரு கூடுதல் பணியாளருக்கு மாதந்தோறும் 3 ஆயிரம் ரூபாய் ஊக்கத்தொகை பெற இத்திட்டம் வகை செய்கிறது.

இந்நிகழ்ச்சியை நாடுமுழுவதும் நேரலை ஒளிபரப்பு செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

முன்னதாக தமது ஃபிரான்ஸ், ஸ்லோவேக்கியா நாடுகளின் அரசு முறை பயணத்தை முடித்துக்கொண்டு பிரதமர் இன்று புதுதில்லி திரும்பினார்.

இப்பயணத்தின்போது ஃபிரான்ஸ் நீஸ் நகரில் நடைபெற்ற பாரத் இன்னோவேட்ஸ் தொடங்கி ஜி-7 மாநாடு விவாடெக் வரை பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்று உரையாடியது குறித்தும் எடுத்துரைத்துள்ளார்.

இருநாடுகளின் அன்பான உபசரிப்பிற்கும் பிரதமர் சமூகவலைதளத்தில் நன்றி தெரிவித்துள்ளார்.

************

பிரதமர் – 12 ஆண்டு

பிரதமர் திரு. நரேந்திரமோடியின் சீரிய தலைமையில் கடந்த 12 ஆண்டுகளில், அனைவருக்குமான வளர்ச்சி என்ற கொள்கையுடன் அரசு செயலாற்றி வரும் நிலையில், வடகிழக்கு மாநிலங்களின் வளர்ச்சி குறித்த செய்தித் தொகுப்பு இன்று இடம்பெறுகிறது.

வடகிழக்கு மாநிலங்களின் வளர்ச்சியை துரிதப்படுத்தும் வகையில் தொலைதூர மற்றும் மலைபாங்கான பகுதிகள் தேசிய போக்குவரத்து அமைப்புடன் இணைக்கப்பட்டு இப்பகுதிகளை உள்ளடக்கிய மாநிலங்கள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

கடந்த 12 ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் காரணமாக விமான நிலையங்களின் எண்ணிக்கை தற்போது 17ஆக உயர்ந்துள்ளது.

உதான் திட்டத்தின் கீழ் 90 வழிதடங்கள் மற்றும் 12 விமான நிலையங்கள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

வடகிழக்கு பகுதிகளில் நான்காயிரத்து 170 கிலோ மீட்டருக்கும் அதிகமான ரயில்பாதைகள் மின்மயமாக்கப்பட்டுள்ளதோடு, 46 ஆயிரம் கிலோ மீட்டருக்கும் அதிகமான கிராம சாலைகளும் அமைக்கப்பட்டுள்ளன.

இதனையடுத்து இப்பகுதிகளில் வர்த்தகம் பொருளாதாரம் போக்குவரத்து, கல்வி உள்ளிட்ட துறைகள் புதிய உச்சத்தை எட்டியுள்ளன.

போக்குவரத்து மேம்பட்டதை அடுத்து சுற்றுலாத்துறை வளர்ச்சி கண்டு உள்ளூர் மக்களின் வாழ்வாதாரமும் உயர்ந்துள்ளது.

மத்திய அரசின் 12 ஆண்டுகால வளர்ச்சி பணிகள் குறித்து திருச்சி தனியார் கல்லூரி உதவி பேராசிரியர் முனைவர் வி.மாணிக்கம் தெரிவிக்கையில்

வாய்ஸ்

************

குடியரசு தலைவர்

நாட்டின் அனைத்து மாநிலங்களில் ஒருங்கிணைந்த முயற்சிகளால் வரும் 2047-ம் ஆண்டிற்கு முன்பே சிக்கிள்செல் நோய் முற்றிலும் ஒழிக்கப்படும் என்று குடியரசு

தலைவர் திருமதி திரௌபதி முர்மு நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

மத்திய பிரதேச மாநிலம் ஓம்காரேஸ்வரில் இதுதொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சியில் இன்று உரையாற்றிய அவர், ஆரோக்கியமான மகளிர் வலுவூட்டப்பட்ட குடும்பம் என்ற இயக்கத்தின் கீழ் நாடுமுழுவதும் இந்நோயை கண்டறிந்து முற்றிலும் ஒழிப்பதற்கான நடவடிக்கைகள் தீவிரபடுத்தப்பட்டுள்ளதாக கூறினார்.

இந்நோயை கண்டறிய இதுவரை நடத்தப்பட்ட பரிசோதனையில் 20 லட்சத்திற்கும் அதிகமானோர் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

************

அமித்ஷா

நாட்டில் குற்றவியல் நீதி அமைப்பு தற்போதைய மாற்றங்களை பூர்த்தி செய்யும் வகையில் புதுப்பிக்கப்பட்டு வருவதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று நடைபெற்ற 26 ஆவது இந்திய கைரேகை மாநாட்டில் உரையாற்றிய அவர், சிக்கலான வழக்குகளை எளிமையாக்குவதில் இந்த அமைப்பு உதவிபுரிவதாக கூறினார்..

குற்றப்பத்திரிக்கைகள் சுருக்கமானதாக இருக்க வேண்டும் என்று வலியுறுத்திய அமைச்சர் பயனுள்ள ஆதாரங்களை மட்டுமே நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

புதிய குற்றவியல் சட்டங்களின் கீழ் தொழில்நுட்ப அடிப்படையிலான விதிகளை அரசு தரப்பு திறம்பட பயன்படுத்துவதை உறுதி செய்ய வேண்டும் என்றும் கூறினார்.

************

சட்டப்பேரவை – முதலமைச்சர்

கர்நாடக அரசு காவிரியின் குறுக்கே மேகதாது அணை கட்டும் நடவடிக்கைக்கு எதிராக தமிழக அரசு கொண்டுவந்த தனி தீர்மானம் சட்டப்பேரவையில் இன்று ஒருமனதாக நிறைவேறியது.

முன்னதாக இந்த தீர்மானத்தை முன்மொழிந்து பேசிய முதலமைச்சர் திரு.விஜய் அரசின் மேகதாது அணை தொடர்பான திட்ட அறிக்கையை மத்திய அரசு பரிசீலிக்க கூடாது என்று வலியுறுத்தியுள்ளார்.

மத்திய அரசின் அனுமதியை பெறாமல் கர்நாடக அரசு தன்னிச்சையாக காவிரி நதியின் குறுக்கே மேகதாது அணை கட்டும் முயற்சி மேற்கொள்வதை எந்தவகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாது என்று கூறினார்.

கர்நாடக அரசின் இந்த செயலுக்கு கடும் எதிர்ப்பை பேரவை தெரிவிப்பதாகவும் அவர் எடுத்துரைத்தார்.

காவிரி படுகை ஒரு பற்றாக்குறை படுகை என குறிப்பிட்டு, படுகையின் மொத்த நீரினையும் உச்சநீதிமன்றமும் காவிரி நடுவர் மன்றமும், படுகை மாநிலங்களுக்கு பகிர்ந்து அளித்து விட்டதால், காவிரி படுகையின் புதிய திட்டங்களை மேற்கொள்ளவோ, கூடுதலாக நீரை பயன்படுத்தவோ இயலாது என்றார்.

அரசியல் கட்சிகளுக்கு இடையே கொள்கை நிலைப்பாட்டில் வேறுபாடுகள் இருந்தாலும், மக்களுக்காக ஒன்றுபட்டு இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

வாய்ஸ்

************

சட்டப்பேரவை உதயநிதி

இத்தீர்மானத்தை வரவேற்று பேசிய எதிர்கட்சி தலைவர் திரு.உதய நிதி ஸ்டாலின் இத்தீர்மானத்தை அனைத்து கட்சி குழுவினரும் பிரதமரிடம் நேரில் வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

காங்கிரஸ், அஇஅதிமுக பா.ம.க, விடுதலை சிறுத்தைகள், தே.மு.திமுக உள்ளிட்ட கட்சிகள் இத்தீர்மானத்திற்கு ஆதரவு தெரிவித்தன.

அனைத்து கட்சிகளும் ஆதரவு தெரிவித்ததை அடுத்து இத்தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

************

இரங்கல்

முன்னதாக அவை இன்றுகாலை கூடியதும் மறைந்த முன்னாள் உறுப்பினர்கள் தா.வீராசாமி, சி.ராமசாமி, சுவாமிநாதன், ஆறுமுகம், பே.கண்ணன், நாஞ்சில் முருகேசன் ஆகியோருக்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டது.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் இரா. நல்லக்கண்ணு, பேரவை முன்னாள் செயலாளர் ராமசாமி திரைப்பட இயக்குனர் பாரதிராஜா தயாரிப்பாளர்கள் ஆர்.பி.சவுத்ரி, கே.ராஜன் ஆகியோர் மறைவிற்கும் இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

************

தர்மபுரி போலியோ

நாடுமுழுவதும் இரண்டாவது கட்ட போலியோ தடுப்பூசி முகாம் வரும் 28ஆம் தேதி நடைபெறுகிறது.

தர்மபுரியில் 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளை இம்முகாமில் பங்கேற்க செய்து போலியோ இல்லாத மாவட்டமாக உருவாக்க மாவட்ட தாய் சேய் நல அலுவலர் திருமதி கார்த்திகா அறிவுறுத்தியுள்ளார்.

வாய்ஸ்

************

தென்காசி

தென்காசி மாவட்டத்தில் கார் பருவ சாகுபடிக்கான முன்னேற்பாட்டு பணிகள் தீவிரமடைந்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

************

உயர்கல்வி விண்ணப்பம்

தமிழகத்தில் வரும் கல்வியாண்டிற்கான பி.எட்.படிப்பில் மாணாக்கர் சேர்க்கைக்கு இன்றுமுதல் அடுத்த மாதம் 21ஆம் தேதிவரை இணையதளம் வாயிலாக விண்ணப்பிக்கலாம் என உயர்கல்வித்துறை அறிவித்துள்ளது.

தர வரிசை பட்டியல் அடுத்த மாதம் 31ஆம் தேதி வெளியிடப்படும் மாணாக்கர் தங்களது விருப்ப கல்லூரிகளை ஆகஸ்ட் 4ஆம் தேதிமுதல் 10 ஆம் தேதிவரை தேர்வு செய்துகொள்ளலாம் என்றும் தெரிவித்துள்ளது.

************

இருவாி

UPSC முதன்மை தேர்விற்கான ஊக்கத்தொகை திட்டத்தின் கீழ் தமிழக மாணாக்கர் இன்றுமுதல் வரும் 30ஆம் தேதிவரை இணையதளம் வாயிலாக விண்ணப்பிக்கலாம் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது.

மயிலாடுதுறை மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகள் முதியோர்களுக்கான உதவி உபகரணங்கள் மதிப்பீட்டு முகாம் இன்றுமுதல் நடைபெற உள்ளதாக மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஸ்ரீகாந்த் தெரிவித்துள்ளார்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் தாட்கோ சார்பில் ஆதி திராவிட பழங்குடியின இளைஞர்களுக்கு ஜவுளி வடிவமைப்பு உற்பத்தி தொடர்பான பயிற்சிகள் வழங்கப்பட உள்ளதாக மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி சினேகா தெரிவித்துள்ளார்.

சிவகங்கை மாவட்டத்தில் நெல் இயந்திர நடவு நேரடி நெல் விதைப்பிற்கு 100 சதவிகித மானியமாக ஏக்கருக்கு 4 ஆயிரம் ரூபாய் வழங்கப்படுவதாக மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.நிசாந்த் கிருஷ்ணா தெரிவித்துள்ளார்.

விருதுநகர் மாவட்டம் வித்திராயிருப்பு அருகே தம்பிபட்டி அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் உள்ள நெல் மூட்டைகளை பாதுகாப்பான இடங்களுக்கு கொண்டு செல்ல நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நெல்லை கல்லிடைக்குறிச்சியில் உணவுத்துறை அதிகாரிகள் மேற்கொண்ட ஆய்வில் செயற்கை முறையில்

பழுக்க வைக்கப்பட்ட ஒன்றரை டன் மாம்பழம் பறிமுதல் செய்யப்பட்டது.

************

தண்ணீர்

திருப்பூர் மாவட்டம் உடுமலை அமராவதி அணையிலிருந்து குடிநீர் தேவைக்காக இன்று தண்ணீர் திறக்கப்பட்டது.

224.64 மில்லியன் கன அடிக்கு மிகாமல் 23ஆம் தேதிவரை தண்ணீர் திறக்க அரசு உத்தரவிட்டுள்ளது.

மேட்டூர் அணைக்கு நீர்வரத்து இன்று வினாடிக்கு ஆயிரத்து 397 கன அடியாக அதிகரித்துள்ளது.

அணையின் நீர்மட்டம் 79.12 அடியாக உள்ளது.

ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து இன்று வினாடிக்கு நான்காயிரம் கன அடியாக அதிகரித்துள்ளது.

************

வானிலை

வளிமண்டல காற்றழுத்த தாழ்வுபாதை காரணமாக திருச்சி, அரியலூர் பெரம்பலூர் கரூர் நீலகிரி சேலம் நாமக்கல் கோவை திண்டுக்கல் தேனி மதுரை ஈரோடு சிவகங்கை திருவண்ணாமலை வேலூர் திருப்பத்தூர் கிருஷ்ணகிரி தர்மபுரி மாவட்டங்களில் இன்று இடி மின்னல்

மற்றும் பலத்த காற்றுடன் கூடிய கன மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

************

பேட்மிண்டன்

மக்காவ் ஓப்பன் பேட்மிண்டன் மகளிர் ஒற்றையர் அரையிறுதிக்கு இந்தியாவின் Ashmita Chaliha முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற காலிறுதியில் அவர் தென்கொரியாவின் மின்.சன்.கிம்-ஐ 21-16 21-18 என்ற நேர் செட்களில் வென்றார்.

************

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது